## சுருக்கம்

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட செல்வி. E.கிருத்திகா என்பவரது பணியினை வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (மீன்.2) துறை

அரசாணை (1டி) எண்.172

நாள் 21.06.2021
திருவள்ளுவர் ஆண்டு 2052
ஆனி – 7

படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.1) துறை, நாள் 23.01.2020.
2. மீன்வளத்துறை ஆணையரின் கடித ந.க.எண்.8845/எம்.5/2019, நாள் 27.01.2021.

----

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கடலூர் மீன்வளத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் மீன்வளத்துறை சார் ஆய்வாளராக பணிபுரிந்த பா.இளங்கோ 27.03.2019 அன்று பணியிடை மரணமடைந்தையடுத்து, அவரது மனைவி திருமதி. விசாலாட்சி என்பவர் தனது மகளான செல்வி. E.கிருத்திகாவுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குமாறு கடலூர், மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் அளித்த 10.10.2019 நாளிட்ட விண்ணப்பமானது, அரசு ஊழியர் இறந்த மூன்றாண்டுகளுக்குள் விண்ணப்பம் அளித்திருந்தார் என்றும், செல்வி. E.கிருத்திகா பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்ததையடுத்து, போதிய வயது வரம்பை பூர்த்தியடைந்ததையடுத்தும் காலஞ்சென்ற அரசுப் பணியாளரின் குடும்பத்தில் பொருள் ஈட்டுபவர் வேறு எவரும் இல்லை என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் தான் உள்ளது என கடலூர் மண்டல துணை வருவாய் வட்டாட்சியர் சான்றளித்துள்ளதன் அடிப்படையிலும் செல்வி. E.கிருத்திகாவுக்கு கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராக திருவாரூர், மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் 21.02.2020 முற்பகல் முதல் தற்காலிகமாக பணிநியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார் என்றும், பணி நியமன நாளில் அவரது வயது 19 ஆண்டுகள் எனத் தெரிவித்து, கருணை அடிப்படையில் மீன்துறை அமைச்சுப் பணியில் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்ட செல்வி. E.கிருத்திகாவின் பணியினை தனியர் பணியில் சேர்ந்த நாளான 21.02.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு மீன்வளத்துறை ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மேலே பத்தி 1–இல் உள்ள மீன்வளத்துறை ஆணையரின் கருத்துருவை அரசு நன்கு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்க முடிவு செய்து, கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் 21.02.2020 முற்பகல் முதல் திருவாரூர் மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்ட

செல்வி. E.கிருத்திகா என்பவர் அப்பணியிடத்திற்கு தேவையான உடற் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அன்னாரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 21.02.2020 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிடுகிறது.

3. செல்வி. E.கிருத்திகா, இளநிலை உதவியாளரின் பணியானது அவர் பணியமர்த்தப்பட்ட நாளான 21.02.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்யப்படுவதால், அவர் வருடாந்திர ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறையின் அ.சா.எண்.8023/க்யூ.1/2021, நாள் 29.04.2021 மற்றும் மனிதவள மேலாண்மை துறையின் அ.சா.எண்.1026/ஜி.2/2021, நாள் 07.04.2021–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தெ.சு. ஜவகர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
மீன்வளத்துறை ஆணையர், சென்னை–35.
செல்வி. E.கிருத்திகா, இளநிலை உதவியாளர்
(மீன்வளத்துறை ஆணையர் மூலமாக)

<u>நகல்</u>
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை, சென்னை–9.
மனிதவள மேலாண்மை துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

S. Thiru 22/6/2021
பிரிவு அலுவலர்

22/06/2021

ந.க.எண். 183/அ/2020

O/o மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை
உதவி இயக்குநர் அலுவலகம்,
திருவாரூர்.

நாள். 15.07.2021

அனுப்பலாகிறது

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை
உதவி இயக்குநர் அலுவலகம்,
திருவாரூர்.

பெறுநர்:
செல்வி. இ. கிருத்திகா
இளநிலை உதவியாளர்,